# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

### Sessions Case No. 18 of 2023

**Deposition of witness for** : **Pw12**

**Name** : **P.ராஜேஷ்**

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தருமபுரி மாவட்டத்தில் சமுகநீதி மற்றும் மனித உரிமை பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு பாரூர் காவல் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். வட்ட காவலுக்கு உட்பட்ட நாகரசம்பட்டி காவல் நிலையம் ஆகும். கடந்த 06.05.2022 ம் தேதி 22 மணி அளவில் வேலம்பட்டி கிராமத்தை சேர்ந்த வேங்கட்டராமகவுண்டர் மகன் கிருஷ்ணன் என்பவர் நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் புகாரின் தன்மைக்கு ஏற்றவாறு அப்போது காவல் நிலைய பொருப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. சந்துரு குற்ற எண் 90/2022 பிரிவு 147, 148,341,323,324 மற்றும் 307 இ.த.ச. பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து மேல் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்ததை பார்வையிட்டும். அப்போது இரவு நேரம் என்பதால் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. மறுநாள் 07.05.2022 ம் தேதி காலை 8 மணிக்கு சம்பவயிடம் சென்று

சாட்சிகள் முத்துமாணிக்கம், பழனி ஆகியோர் முன்னிலையில் வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 8 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9 ஆகும். பின்னர் அதே நாளில் 9 மணி அளவில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வீரபத்திரன் வீட்டின் அருகில் இருந்த இரும்பு கொடுவாள் ஒன்றை கைபற்றுதல் மகஜரில் கைபற்றினேன். மேற்படி கைபற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.10** ஆகும். அதே நாளில் சாட்சிகள் கிருஷணன் , அஜீத், முருகன் , மாரியப்பன் முத்துமாணிக்கம், பழனி ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கண்ட எதிரிகள் தலைமரவாக இருந்தும் மான்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றதால் எதிரிகளை கைது செய்ய இயலவில்லை. பின்னர் 11.07.2022 ம் தேதி சாட்சிகள் விஜயகுமார், லட்சுமி , சிறப்பு காவல் உதவி ஆயவாளர் சசிகுமார் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் சந்துரு ஆகியோகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட விஜயகுமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சோமசுந்தரம் காவேரிபட்டினம் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று மற்றும் கருத்துரை பெற்றேன். இவ்வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 அ.ச.ஆ.11 ஆகும். சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் உதவி இயக்குனர் குற்றவழக்கு தொடர்வு துறை அவர்களிடம் கருத்துரை பெற்று எதிரிகள் மீது பிரிவு 147, 148,341,323,324 மற்றும் 307 இ.த.ச. பிரிவின் கீழ் இறுதி அறிக்கை 01.08.2022 ல் தாக்கல் செய்தேன்.

**குறுக்குவிசாரணை**

வழக்கு கோப்புகள் என் பார்வைக்கு எத்தனை மணிக்கு வந்தது என்றால் 06.05.2022 இரவு 10.30 மணிக்கு வந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் பகல் 12 மணி. சம்பவம் எந்த இடத்தில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் வேலம்பட்டி கிராமம் முனியம்மாள் வீட்டு அருகே நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. மருத்துவரிடம் காயம்பட்டநபர் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக சொன்னார் என்றால் 06.05.2022 ம் தேதி 1மணிக்கு நடந்ததாக கூறி உள்ளார். எந்தந்த ஆயிதத்தால் தாக்கியதாக மருத்துவரிடம் கூறி உள்ளார் என்றால் கத்தியால் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி கத்தி என்பது சுரி தத்தியாக இருக்கலாம் என்றால் அது மருத்துவரிடம் தான் கேட்கவேண்டும். கல் மற்றும் கை, கால்களால் தாக்கியதாக மருத்துவரிடம் கூறவில்லை என்றால் சரிதான். எத்தனை

பேர் தாக்கினார்கள் என்று மருத்துவரிடம் அவர் கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவர் எனது விசாரணையில் காயம் பட்ட நபரை எத்னை பேர் தாக்கினார்கள் என்று கூறி உள்ளாரா என்றால் தங்கள் ஊரை சேர்ந்த தெரிந்த நபர்கள் என சொல்லியுள்ளார். எதிரிகள் தரப்பிற்கும், புகார் தாரர் தரப்பிற்கும் வழி பிரச்சனை உள்ளது விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். புகார் தாரரே புகாரில் குறிப்பிட்டுள்ளார். பிரச்சனைக்கு உரிய வழிக்கு பக்கத்தில் புகார் தாரர் கம்பிவேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான். கத்தி இரத்த கரையுடன் கைபற்றபட்டதா என்றால் இல்லை. புகார் தாரர் இரத்தத்துடன் கத்தி கைபற்றியதாக கூறி இருப்பது தவறு என்றால் சரிதான். காயம் பட்டவர் உடல் மற்றும உடைகள் முழுவதும் இரத்தம் இருந்ததாக காவல்துறையிடம் சென்னதாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. புகார் தாரர் தனது வாக்குமூலத்தில் கல்லால் மாறி, மாறி அடித்தார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதார்கான கற்களை கைபற்றினேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில இரத்தம் இருந்ததாக போலிசார் பார்த்தார்கள் என சொல்லியிருப்பது என விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து இரத்தம் படிந்த மண் எடுத்து சென்றதாக காயம் பட்டவர் விசாரணையில் கூறி உள்ளார் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் புகார் தாரர் நடப்பட்டு இருந்த கற்கள் சேதப்படுத்தியதாக கூறுவதற்கு கற்களை கைபற்றினேனா என்றால் சேதப்படுத்தவில்லை 20 கற்கள் சாய்த்தவிட்டதாக புகாரில் கூறி உள்ளார். அதற்கான புகைப்படம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. காயம் பட்ட நபரிடம் அவர் மருத்துவம் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான CT Scan உள்ளிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தியுள்ளேனா என்றால் இல்லை அதை மருத்துவரிடம் கருத்துரைக்காக காண்பித்துவிட்டு காயம்பட்ட நபரிடம் கொடுத்துவிட்டேன். காயம் பட்டவர் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் மதியம் 12 மணி ஆகும். காயம் பட்ட நபர் சம்பவம் 11.30 மணி முதல் 12 மணி வரை நடந்ததாக கூறி உள்ளார் என்றால் என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை மருத்துவரிடம் ஒரு மணி என கூறி உள்ளார். அ.சா.ஆ. 3 முருகன் நீதிமன்றத்தில் சாட்சிம் அளிக்கும் போது சம்பவ இடத்திற்கு செல்லவில்லை கூறியுள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு கூறவில்லை. அ.சா.ஆ.4 மாரியப்பன் அ.சா.ஆ.3 யை தெரியாது என சொல்லியுள்ளார் என்றாலும் சம்வத்தை நேரில் பார்க்கவில்லை என கூறியுள்ளார் என்றாலும் அவ்வாறு எனது விசாரணையில் கூறவில்லை. 07.05.2022 ம் தேதி கைபற்றியதாக கூறும் வழக்கு

சொத்தை நீதிமன்றத்தில் 26.07.2022 ம் தேதி தான் முன்னிலை படுத்தி உள்ளேன் என்றால் சரிதான். கைபற்றுதல் மகஜரில் இரும்பு கொடுவாள் 1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். படிவம் 91 ல் மேற்படி கொடுவாளின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் கைபற்றுதல் மகஜரில் அளவுகள் குறிப்பிடபடவில்லை என்றாலும் சரிதான். மேற்படி கைபற்றபட்டதாக கூறும் 07.05.2022 ம் தேதியில் இருந்து நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தி உள்ள 26.07.2022 கால கட்டத்தில் நான் புகார் தாரருடன் சேர்ந்து மேற்படி கொடுவாளை ஜோடனை செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதற்காக தான் கால தாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த கிருஷ்ணனை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் 07.05.2022 ல் விசாரித்தேன். எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை விசாரித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி சாட்சிகளின் விசாரணை வாக்குமூலங்களை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளேன் என்றால் 21.09.2022 ஆகும். முருகன், மாரியப்பன் அஜீத், முத்துமாணிக்கம், பழனி ஆகியோர்களை எப்போது விசாரித்தேன் என்றால் 07.05.2022 ஆகும். அவர்களை எத்தனை மணிக்கு எந்த இடத்தில் விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் விசாரித்தேன். ஒவ்வோருவரையும் எவ்வளவு நேரம் விசாரித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. விஜயகுமாரை எப்போது விசாரித்தேன் என்றால் 11.07.2022 விசாரித்தேன். எத்தனை மணிக்கு எந்த இடத்தில் விசாரித்தேன் என்றால் நேரம் ஞாபகம் இல்லை அவரது வீட்டில் வைத்து விசாரித்தேன். நான் சம்பவ இடத்தில் சென்று சாட்சிகளை கூறுவது பொய் என்றாலும் வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிகள் தரப்பில் புகார் தாரர் தரப்பிற்கு எதிர்ராக கொடுத்த புகாரின் பேரில் குற்றவழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இருந்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக அவர்களிடம் பொய்யான புகார் பெற்று இந்த வழக்கு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரிவர விசாரணைசெய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்றபத்திரிக்கை தக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.